DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 15/2021 PW : 2

Name : வெங்கடேசன் Age -

Father Name : ஏழுமலை Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 03.12.2024.

( பிரதிவாதி தரப்பு சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : இன்று சாட்சியம் சொல்வதற்கு வாதி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். சம்பத் என்பவருடைய வீடு பாப்பரபாக்கம் மண்ணூர் கூட்ரோடு நெடுஞ்சாலையில் ஓரத்தில் உள்ளதா என்றால் சரியல்ல, அங்கு வாதியின் கடை தான் உள்ளது. வாதியும் பிரதிவாதியும் வேறு இடத்தில் வீடு கட்டி தனிதனியாக வாழ்ந்து வருகிறார்கள். எனது வாதியும் நானும் ஒரே தெருவில் தான் வசிதது வருகிறோம். வாதியானவர் குறுக்கு சந்தில் (Lane) வசித்து வருகிறார். நரசிம்மாள் என்பவருக்கு உறவுமுறை இல்லை முறை. அக்கா தம்பி முறை ஆகிறது. Ex.B7 ஆவணத்தில் சவிதா மருத்துவமனையில் நரசிம்மாள் என்பவர் நவம்பர் மாதம் 2018 ல் சிகிச்சையில் இருந்தற்கான சான்று என்றால் சரிதான், உடம்பு சரியில்லாமல் தான் இருந்தார். அவர்கள் உடல்நிலை குன்றி கர்பப்பை அகற்றப்பட்டு உடல்நிலைகுன்றி தோல் சுறுக்கி படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரிதான். நரசிம்மாள் என்பவர் சுமார் நான்கு ஐந்து வருடமாக படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் அவ்வளவு நாளாக இல்லை. நரசிம்மாள் என்பவரின் இளைய மகன் பாண்டுரங்கன் என்பவரை எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். பாண்டுரங்கன் என்பவர் திருமணம் ஆகாமல் இருந்த நாள் வரை பாண்டுரங்கன்

உடன் தான் தனி வீட்டில் இருவரும் குடித்தனம் நடந்திகொண்டு இருந்தார்கள் என்றால் சின்ன பையனை விட்டு பிரியாமல் அவர்களுடன் தான் இருந்தார். என்னுடைய பிராமண வாக்குமூலத்தில் கூறியுள்ள உயிலில் தனியாக அழைத்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் நான் அங்கு தான் இருந்தேன். முதலாவது நரசிம்மாள் என்பவர் கைரேகை வாங்கினார்கள், அதன்பின்பு நரசிம்மாள் என்ற பெயரை வழக்கறிஞர் எழுதினார். இருவர் சாட்சி கையெழுத்து போட்டார்கள், அவர்கள் பெயர் பூபதி என்பவர் மற்றும் நான் கையெழுத்து போட்டேன். Ex.A3 ஆவணத்தில் உயிலை தயார் செய்த வக்கீல் கையெழுத்து போட்டாரா என்றால் போட்டார்கள் என்றால் கையெழுத்து போட்டதாக சொன்னார்கள், ஆனால் அவர் கையெழுத்து போட்டதை கவனிக்கவும் இல்லை பார்க்கவும் இல்லை. நரசிம்மாள் உயிருடன் இருக்கும்போது பாண்டுரங்கன் என்பவருக்கு உயில் சாசனம் எழுதி வைத்த விவரம் தெரியாது, அப்படி பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் பாண்டுரங்கன் பெயரில் எழுதி வைத்திருப்பது தெரிந்திருந்தால் நான் கையொப்பம் போட்டு இருக்கமாட்டேன். Ex.A3 ஆவணத்தில் என்னுடைய கையெழுத்தை தமிழில் போட்டுள்ளேன். Ex.A3 ஆவணத்தில் 2ம் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அருகாமையில் உள்ள எம். ஏழுமலை நாயக்கர் மற்றும் பாப்பரபாக்கம் என்ற விவரம் நான் எழுதியது அல்ல. என் தகப்பனார் பெயரை கேட்டார்கள் நான் சொன்னேன். யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது, ஞாபகமில்லை. உயில்சாசனத்தை நரசிம்மாள் என்பவர் எழுதி வைப்பதற்கு நல்ல திட மனநிலைமையிலும் சரியான ஆற்றலுடனும் இல்லை என்று சொன்னால் அவர்கள் நல்ல நிலைமையில் தான் இருந்தார், பேசிக்கொண்டு இருந்தார். உயில் சாசனத்தில் உள்ள நரசிம்மாள் என்பவர் கைரேகை என்று சொல்லப்படுவது அவருடைய கைரேகை இல்லை, அது மோசடியாக ஏமாற்றும் வண்ணமாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி நரசிம்மாள் என்பவருக்கு சம்பத் என்பவருக்கும் இடையே ஒரு அசல் வழக்கு நடந்துகொண்டு இருந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் நரசிம்மாள்

என்பவரும் வாதி சம்பத் என்பவரும் சமரசம் செய்துகொள்ளவில்லை என்றால் செய்துகொள்ளவில்லை. பொய்யாக சட்டத்திற்கான முரணான Ex.A3 ஆவணத்தை தயார் செய்து அதில் நான் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்காக ஒருதலை பட்சமாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/. M.A. Kabeer
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்
திருவள்ளூர்,